**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்**

அசல் வழக்கு எண். 87/2009

நாள்: 07.10.2025

பெயர்: சக்திவேல் (பி.வா.சா.3) த/பெ: செல்வராசு

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை...**

1. லோகம்பாள் என்பவருக்கு தாவா 1, 2, 3 அயிட்ட சொத்துகள் பூர்வீக சொத்துகள் என்றால் சரிதான். 4 மற்றும் 5 அயிட்ட சொத்துகள் லோகம்பாளின் கிரைய சொத்துகள் என்றால் சரிதான். தாவா சொத்துகளை லோகம்பாள் உயிருடன் இருக்கும்வரை அனுபவித்து வந்தாரா என்றால் இல்லை, சாட்சி தாமாக முன்வந்து அவரது 4 மகன்களுக்கும் பிரத்து கொடுத்துவிட்டார் அவர்கள் அனுபவம் செய்து வந்தார்கள். தாவா சொத்துகளை லோகம்பாள் உயிருடன் இருக்கும்வரை அனுபவித்து வந்தார் என்றும் நான் வழக்கிற்காக இல்லை என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. லோகம்பாள் 31.12.2007 ம் ஆண்டு இறந்துவிட்டார் என்று சொன்னால் சரிதான். லோகம்பாள் இறப்பதற்கு முன்பு **வா.சா.ஆ.3** ஆன உயில் ஆவணத்தை எழுதி வைத்தாரா என்றால் இல்லை சாட்சி தாமாக முன்வந்து அது ஜோடிக்கப்பட்டது என்று கூறுகிறார். லோகம்பாள் இறந்ததற்கு பின்னர் **வா.சா.ஆ.3** ஆவணத்தின் அடிப்படையில் வாதிகள் தாவா சொத்துகளை ஆண்டு அனுபவம் செய்துவருகின்றனர் என்றால் சரியல்ல. என்னுடைய எதிருரை படியும் நான் தாக்கல் செய்த பிராமான வாக்குமூலம் படியும் 20.03.2007ன்படி எவ்வித பாக பிரவினை ஏற்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தை உயில் எழுதி வைப்பதற்கு முழு உரிமையும் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. லோகம்பாள் உயிருடன் இறந்த காலத்தில் பாக பிரக்கப்பட்டது என்று சொன்னல் சரியல்ல. எங்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட **பி.வா.சா.1** ஆவணம் எந்த காலகட்டத்திலும் நடைமுறையில் வரவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனவே வாதிக்கு கோரியுள்ள பரிகாரம்படி அவருக்கு விளம்புகை மற்றும் செயலுறுத்து கட்டளை

பரிகாரம் கிடைக்கவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

ஒப்பம்/-செ.சக்திவேல்,
திறந்த நீதிமன்றத்தில், சாட்சி சொல்ல சொல்லி,
என்னால் தட்டச்சருக்கு திருப்பி சொல்லப்பட்டு
அவரால் தட்டச்சிடப்பட்டு, சாட்சிக்கு படித்து
காட்டி, அவரால் சரி என ஒப்புக்கொண்டு
கையெழுத்து செய்தார்.

ஒப்பம்/- S.தனலெட்சுமி,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.